**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 6 of 2021** |
| Deposition of witness | : | **DW1** |
| Name | : | **பிரகாசம்** |
| Husband Name | : | **குழந்தைசாமி** |
| Age | : | **45** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12.11.2025.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது சர்க்கார் பெரியபாளையம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக உள்ளேன். இந்த வழக்கு சம்பந்தமாக கள விசாரணை செய்த போது, மாரநாயக்கருக்கு இரண்டு மனைவிகள் என்று ஊர் பொதுமக்கள் வாயிலாக தெரிந்து கொண்டேன். இரண்டு மனைவிகள் பெயரும் பாப்பாத்தி. முதல் மனைவி சுமார் 1962 காலகட்டத்தில் இறந்து விட்டதாக தெரிந்து கொண்டேன். இரண்டாவது மனைவி உயிரோடு தான் உள்ளார். முதல் மனைவிக்கு ஒரே மகள் பெயர் பாப்பாத்தி. இரண்டாவது மனைவிக்கு மூன்று மகன்கள் (ரங்கசாமி, துரைசாமி, சின்னசாமி) நான்கு மகள்கள் (சந்திரா, சரஸ்வதி @ பேபி, சுப்புலட்சுமி, சாந்தாமணி).

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மாரநாயக்கரின் பெற்றோர் யாரும் உயிருடன் இல்லை என்றால் சரிதான். நான் குறிப்பிட்ட மேற்படி நபர்களை தவிர மாரநாயகருக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்றால் சரிதான்.

**<u>இரண்டு மற்றும் ஐந்தாம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. மாரநாயக்கரின் தாயார் பெயர் பாப்பம்மாள். அவரது தந்தை பெயர் பாப்பநாயக்கர். அவர்களது இறப்புச் சான்றிதழ் வாங்கி பார்த்தேனா

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.11.12 19:02:06 +0530

என்றால் இல்லை நான் மேற்படி விவரங்களை ஊர் பொதுமக்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டேன். மாரநாயக்கருடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அதைப் பற்றி பொதுமக்கள் எதுவும் சொல்லவில்லை. முதல் மனைவி பாப்பாத்திக்கு ஒரு மகளைத் தவிர வேறு குழந்தைகள் யாரும் இல்லை என்றால் சரிதான். முதல் மனைவி பாப்பாத்தி எதன் காரணமாக இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் மாரநாயக்கரின் உறவினர்களை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன், ஆனால் அவர்கள் பெயரை சொல்லவில்லை. நான் சுமார் 20 லிருந்து 30 நபர்களை விசாரித்து இருப்பேன். அவர்கள் யாரும் பெயர் சொல்லவில்லை. நான் சர்க்கார் பெரியபாளையத்தில் மூன்று ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன்.

2. எனது உதவியாளர் கணேசன் சர்க்கார் பெரியபாளையத்தில் ஆறு ஆண்டுகளாக உள்ளார். நான் எனது உதவியாளரை விசாரித்து நான் விசாரித்த நபர்களின் பெயர்களை அறிய முயற்சி ஏதேனும் எடுத்தேனா என்றால் முயன்றேன் ஆனால் அவரும் பெயர்களை சொல்லவில்லை. நான் குளத்துபாளையம் பகுதியில் உள்ள வீடுகள், பள்ளிக்கூட வீதியில் உள்ள வீடுகள், பழனியாண்டவர் கோவிலின் அருகே உள்ள வீடுகள் ஆகிய இடங்களில் விசாரித்தேன். நான் விசாரித்த நபர்கள் அந்த ஊரை சார்ந்தவர்கள் தான் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரியல்ல, கிராம நிர்வாக அலுவலர் என்ற அடிப்படையில் எனக்கு அந்த விவரங்கள் தெரியும்.

3. இரண்டாவது மனைவி என்று சொல்லப்படும் பாப்பாத்தி மண்ணரை, மனோநகர், ஊர் நாயக்கர் காடு என்ற முகவரியில் வசித்து

வருகிறார் என்றால் சரிதான். எனக்கு தெரிந்து அவருக்கு திருமணமானதிலிருந்து அங்கு தான் வசித்து வருகிறார். நான் பொதுமக்களை விசாரித்து அறிக்கை தயார் செய்து அவர்களின் கையொப்பம் வாங்கவில்லை என்றால் கையொப்பம் செய்ய மறுத்து விட்டார்கள். ஏற்கனவே பாப்பாத்தி வாரிசு சான்று கோரி தாக்கல் செய்த மனு உண்மைத்தன்மை அறிய இயலாத காரணத்தினால் நிராகரிக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு அவர் மனு செய்த காலகட்டத்தில் பணியில் இருந்த கிராம நிர்வாக அலுவலர் களஆய்வு செய்து, அறிக்கை கொடுத்ததின் பேரில்தான் மேற்படி குறிப்புடன் மனு திருப்பப்பட்டுள்ளது என்றால் அதனைப் பார்த்து தான் சொல்ல வேண்டும். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பானை ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கில் கள ஆய்வு செய்ய வேண்டி எனக்கு மேல் இடத்திலிருந்து எழுத்து மூலமாக உத்தரவு எதுவும் வரவில்லை என்றால் சரிதான்.

4. நீதிமன்றத்தில் இந்த வழக்கு உள்ள விவரத்தை எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் அரசு வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன். தாசில்தார் அலுவலகத்தில் இருந்து பாப்பாத்தி தாக்கல் செய்த மனுவை பரிசீலிக்க நான் கேட்டு பெற்றேனா என்றால் இல்லை. நான் உண்மையில் விசாரிக்காமல் விசாரித்ததாக, களஆய்வு செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் யார் யாரை விசாரித்தேன் என்று பெயர் குறிப்பிட இயலவில்லை என்றாலும் சரியல்ல. நான் விசாரித்த வரையில் இரண்டாவது மனைவி என்று சொல்லப்படும் பாப்பாத்தி உடன் தான் மாரநாயக்கர் வசித்து வந்தார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் மாரநாயக்கருக்கு முதல் மனைவியாக பாப்பாத்தி

என்பவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஒன்றாவது பிரதிவாதி பாப்பாத்தி மட்டும் தான் மாரநாயக்கரின் ஒரே மனைவி என்று சொன்னால் சரியல்ல. நான் கள ஆய்வு செய்த இடமானது ஊத்துக்குளி வட்டத்திலும், திருப்பூர் வடக்கு வட்டத்திலும் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

5. நான் களஆய்வு செய்த தேதி சொல்ல இயலுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் கள ஆய்வு செய்ததை அலுவலக பதிவேடுகளில் எழுத வேண்டும் என்றால் செய்ய வேண்டும், ஆனால் கணினி மையம் ஆக்கப்பட்ட பின்பு அவ்வாறு நான் செய்வதில்லை, தகவல் பலகையில் மட்டும் எழுதுவது வழக்கம். அவ்வாறு கணினிமயம் ஆகிய பின்பு பதிவேடுகளை பராமரிக்க தேவையில்லை என்று ஏதேனும் அரசாணை உள்ளதா என்றால் இல்லை. நான் உண்மையில் களப்பணி செய்யாத காரணத்தினால் தான் பதிவேடுகளை பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் பொய்சாட்சி அளித்துள்ளேன் என்றாலும், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள இயலாது என்றாலும் சரியல்ல. மார நாயக்கர் ஊத்துக்குளி வட்டத்தில் வசிக்க வில்லை என்றாலும், அவர் இறந்தது மட்டும்தான் ஊத்துக்குளி வட்டம் என்றாலும் அவர் ஊத்துக்குளி வட்டத்தில் எல்லை பகுதியில்தான் வசித்து வந்தார்.

6. பொதுவாக இறந்தவர் எங்கு வசித்து வந்தாரோ, அந்த வட்டத்திற்கான தாசில்தார்தான் வாரிசு சான்று கொடுக்க இயலும் என்றால் சரியல்ல, நிலையான முகவரி எங்கு உள்ளதோ அந்த வட்டத்தை சார்ந்த தாசில்தார் தான் வாரிசு சான்று கொடுக்க இயலும். மாரநாயக்கர் பிறந்ததிலிருந்து சர்க்கார் பெரியபாளையம் கிராமத்தில் தான் வசித்து வந்தார். அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முன்னுக்கு பின் முரணாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இதற்கு முன்னர் ஒன்றாம் பிரதிவாதி பாப்பாத்தியுடன் மாரநாயக்கர் வசித்து வந்ததாக சொல்லிவிட்டு தற்போது சர்க்கார் பெரியபாளையத்தில் வசித்து வந்ததாக முரண்பட்டு சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாரநாயக்கர் வாழ்ந்து வந்த ஒன்றாம் பிரதிவாதியின் வீடானது திருப்பூர் வடக்கு வட்டத்தில் வருவதால் மேற்படி தாசில்தார் தான் வாரிசு சான்று கொடுக்க இயலும் என்றாலும், ஊத்துக்குளி வட்டாட்சியருக்கு வாரிசுசான்று கொடுக்க எந்த ஒரு அதிகாரமும் இல்லை என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.